---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நனோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS for SMEs) இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு (SLFRS for SMEs) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது

கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 693,993,216 பெறுமதியான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் அபிவிருத்தி மற்றும் புத்தாக்குநர் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்று தற்போது ஆய்வுகூட உபகரணங்களின் மீள் மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.2 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களில் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக 2.6 குறிப்பில் கவனம் செலுத்தவும். கம்பனி மீளாய்வாண்டிற்காக ரூபா 53,324,398 தேறிய இலாபம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 1,422,311,947 திரண்ட நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் அதன் பிரகாரம் கம்பனியின் மொத்த சொத்துக்கள் ரூபா 59,802,470 இனை விஞ்சிய மொத்தப் பொறுப்புக்கள் காணப்பட்டது. | இது விசேட பொதுக் கூட்டத்தின் போது (EGM) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக கூர்ந்து கவனம் செலுத்துதல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.**

**1.6.1 பெற வேண்டிய கணக்குள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நான்கு வருடங்களை விஞ்சிய ரூபா 2,767,407 தொகையும் ஒரு வருடத்தை விஞ்சிய ரூபா 6,503,883 தொகையும் ஆன கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 9,271,290 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகளை அறவிடுவதற்கு முகாமைத்துவத்தால் ஆகக் கூடிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. எனினும் பல்வேறு காரணங்களால் அது தோல்வியடைந்திருந்தது. | பெற வேண்டிய பணத்தை அறவிடுதல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நான்கு ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் மிகுதித் தொகையான ரூபா 1,908,230 பெறுமதியைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த ஆண்டின் போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்துவைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான செயல் வழி கோவை கைநூலின் 6.6 ஆம் பந்தி | (i) | நிதி ஆண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் கணக்கு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதும், 2023 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் கணக்குகள் 02 மாதம் 24 நாட்கள் | தாமதத்திற்கு அடிப்படையாக அண்மைக் காலங்களில் முகாமைத்துவத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தமையும் நிதிசார் பணிகளில் பதவியணியினர் குறைவடைந்தமையும் வருடாந்த கணக்காய்வு செயற்பாடுகள் கால ரீதியில் ஆரம்பிப்பதற்கு ஏற்பட்டிருந்தமையும் | பொது முயற்சிகள் தொடர்பான செயல் வழி கோவை கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணையின் பிரகாரம் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிகதிக்கு |

| | | | |
|---|---|---|---|
| | தாமதமாகி 2023 ஆகஸ்ட் 24 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தாக்கமளித்தது. | கையளிக்கப்படல் வேண்டும். |
| (ii) | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் ஆண்டறிக்கையின் வரைவொன்றுடன் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதும் கம்பனியால் ஆண்டறிக்கையின் வரைவொன்று நிதிக்கூற்று தொகுதியுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 22,431,598 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய அண்டின் நட்டம் ரூபா 4,875,832 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 17,555,766 நட்டத்தில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த நட்டத்திற்கு மீளாய்வாண்டின் நிர்வாக செலவினம் ரூபா 23,189,427 இனால் அதிகரித்தமையும், அரசாங்கத்தின் மானியம் ரூபா 38,400,000 இனால் வீழ்ச்சியடைந்தமையும், பொறியியல் சேவை வருமானம் ரூபா 16,555,643 இனால் வீழ்ச்சியடைந்தமையும், வாடகை வருமானம் ரூபா 52,217,611 இனால் அதிகரித்தமையும், பகுப்பாய்வு சேவை வருமானம் ரூபா 6,088,642 இனால் அதிகரித்தமையும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் ரூபா 2,452,289 இனால் வீழ்ச்சியடைந்தமையும் பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,412,601 பெறுமதியான பூர்த்தி பசளை இருப்பொன்று கணக்காண்டு முடிவடைந்த திகதி வரையிலும் களஞ்சியத்தில் விற்பனை செய்யப்படாமல் காணப்பட்டது. | இலங்கை நனோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியால் 2009 ஆம் ஆண்டின் போது விவசாயக் கைத்தொழிலில் யூரியா விரையமாவதைக் குறைக்கும் நோக்கில் ஹைட்ரொக்சிஎப்படைட் நனோ கூறினைப் பயன்படுத்தி யூரியாவின் அடிப்படையில் மெதுவாக விடுவிக்கப்படுகின்ற பசளையொன்று உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் உள்நாட்டு யூரியா | புதிய கண்டு பிடிப்புகளுக்காக பொருத்மான சந்தையொன்றை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உற்பத்தி தொழிற்சாலை காணப்படாமையின் காரணமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களின் ஆர்வத்தினை கவர்ந்து இந்த ஆராய்ச்சி கவனத்திற்கொள்ளக்கூடிய ஆர்வத்தைப் பெற்றது. 2017 ஆம் ஆண்டு வரையில் இலங்கை நெனோ தொழிநுட்ப (தனியார்) கம்பனியால் சிறிய அளவிலான யூரியா – ஹைட்ரொக்சிஎப்படைட் நெனோ கலப்பின உற்பத்தி தொழிற்சாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்பு வரையறுக்கப்பட்டதன் காரணமாக உற்பத்தி தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | இலங்கையின் நனோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியால் 2021 நவம்பர் 15 ஆம் திகதி தனியார் கம்பனியொன்றுடன் 05 வருட காலத்திற்காக அலுவலகம் மற்றும் ஆய்வுகூட இட வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குப் புறம்பாக ரூபா 1,986,673 பெறுமதியான தளபாடங்கள் வாடகைக்கு வழங்கப்பட்ட அலுவலக கட்டிடத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. | எங்களது புதிய கட்டணத்தை கவர்ந்துகொள்வதற்காக ஜோன் கீல்ஸ் ஹோல்டின் பீஎல்சீ இற்கு அவ்வாறான ஒத்துழைப்பு வழங்கப்பட்ட போதும் அதற்காக திறைசேரி நிதியம் பயன்படுத்தப்படவில்லை. | உடன்படிக்கைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நனோ பசளை அபிவிருத்தி தொழில்நுட்பத்தைக் கையளிப்பதற்காக இலங்கை நனோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியால் 2012 மார்ச் 15 ஆம் திகதி இந்திய கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் மொத்த பெறுமதி அமெரிக்க டொலர் 2,250,000 ஆக இருந்ததுடன் நான்கு தவணைகளில் மீள அறவிடுவதற்கு தீர்த்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் அமெரிக்க டொலர் 1,000,000 தொகை மாத்திரம் குறித்துரைத்த நேரத்தில் தீர்த்து வைக்கப் பட்டிருந்ததுடன் 2013 யூன் 30 ஆம் திகதி அமெரிக்க டொலர் 750,000 தொகையில் பட்டியல் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊட்டச்சத்து பதார்த்தங்கள் மெதுவாக விடுவிக்கப்படுகின்ற பசளை உரித்தை நாகர்ஜூனா கொள்வனவு செய்து அமெரிக்க டொலர் 1.0 மில்லியன் செலுத்தப் பட்டது. இலங்கை நெனோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியால் பேடன்ட் அனுமதிப்பத்திர மாற்றத்துடன் அவர்கள் இரண்டாவது தவணை செலுத்துவதற்கு தீர்மானித்திருந்தனர். எனினும் நிதி நெருக்கடிகளின் காரணமாக சேவை பங்களிப்பாளர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை தீர்க்க முடியாதிருந்தது. மேலும் எங்களால் அவர்களின் பேரில் உள்ள பேடன்ட் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் மிகுதித் தொகை கிடைக்காதிருந்தமையால் எங்களின் பேடன்ட் அனுமதிப்பத்திரம் மூலம் எதிர்காலத்தில் பணத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டு கடிதமும் சேவைப் பங்களிப்பாளருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய வருமானத்தைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நனோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியால் வதிவிட வசதிகள் வழங்குவதற்காக 02 கட்டிடங்களில் 62 அறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | வாடகைக்கு வழங்குவதற்காக பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுவதுடன் மேலும் தேவையான வசதிகள் செய்யப்படுகின்றது. | பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 33,373,109 செலவில் பசுமை வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 செப்டெம்பர் வரையிலும் அது எதிர்பார்த்த பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கிறீன் ஹவுஸ் வசதிகளுடன் வாடிக்கையாளர்கள் இருவருக்கு அவ்வவ்போது பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வாடிக்கையாளர்கள் சிறு தொகையினர் பின்வருமாறு<br>• கோஜன் (Codgen)<br>• LOLC உயர் தொழில்நுட்பம் | பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 88,770,040 செலவில் தொடர்ச்சியான மருந்து மூலப் பொருட்கள் தீர்மானிக்கப்பட்ட ஆய்வுகூடத்தை உபாய வழி செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் 2023 மார்ச் மாதம் இறுதி வரையிலும் அதன் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வெற்றியுடன் இலங்கை நனோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியால் ஆய்வுகூட அளவிடைகளைப் பரிசோதித்து பூர்த்தி செய்து தேவையான கிலோ அளவு பெறப்பட்டு பகுப்பாய்வு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. தற்போது இந்த செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ளதுடன் இந்த உபரணங்களில் சிலவற்றை ஏனைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங் களுக்காக கனிப்பொருள் அய்வுகூடம் மற்றும் இயற்கை உற்பத்தி இரசாயன ஆய்வுகூடங் களுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |